**88 August**
விஞ்ஞானப் பிரிவு
வகுப்புக்கள்
பிரிவு II
விரைவில் ஆரம்பம்
விண்ணப்பங்கள்
ஏற்கப்படுகின்றன.
விபரங்களுக்கு:
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# உதயன்

விலை ரூ.1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

Physics: திரு. வர்ணம்
Chemistry: திரு. தில்லைநாதன்
Botany: திரு. குகாதரன்
Zoology: திரு. நாகநாதன்
Pure & Applied Maths: திரு. நல்லையா
விபரங்களுக்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞூ பங்குனி மீ 11 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 12 (24-03 1986) UTHAYAN - A LVELY TAMIL DAILY கதிர்:108

இனப் பிரச்சினை:

# பண்டாரி வேண்டாம்

# தமிழகம் சொல்கிறது

## புதுடில்லி வட்டாரங்களில் புதிய இருவரின் பெயர்கள்

சென்னை, மார்ச். 23

இலங்கை இனப் பிரச்சினையைக் கையாளும் பணியைத் தொடர்ந்தும் திரு ரொமேஷ் பண்டாரியிடம் ஒப்படைக்க வேண்டாம்.

இவ்வாறு தமிழக அரசாங்க வட்டாரங்கள் மத்திய அரசாங்கத்திடம் கேட்டுள்ளன என்று நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

திரு. பண்டாரியைக் கொழும்புக்கு அனுப்புங்கள், அனுப்புங்கள் என்று இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன விடாப்பிடியாக இந்தியாவைக் கேட்டவண்ணம் இருக்கின்றார்.

இதன் காரணமாகத்தான் திரு. பண்டாரி, இந்தியாவின் விசேட ஆலோசகராக இலங்கை செல்வது குறித்து தமிழக அரச வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

அண்மையில் தமிழக மின்சாரத்துறை அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனைச் சந்தித்து இனப் பிரச்சினைபற்றிப் பேச திரு. பண்டாரி முயற்சித்தாராம்.

பண்ருட்டி இராமச்சந்திரனே அந்த அழைப்பை நாசுக்காகத் தட்டிக் கழித்துவிட்டார். பண்டாரியை பண்ருட்டி சந்திக்கவே இல்லை.

இச்சூழ்நிலையில் மார்ச் 31 உடன் ஓய்வு பெறப் போகும் திரு. பண்டாரி அரசியலில் குதிக்கலாம் என்றும் டில்லி வட்டாரங்கள் கூறுகின்றன.

திரு. பண்டாரி பிரதமர் ராஜீவுக்கு மிகவும் வேண்டியவர்.

இனப் பிரச்சினையைக் கையாள விசேட ஆலோசகராக நியமிக்கப்படாவிட்டால், திரு. பண்டாரியை ராஜ்யசபா எம். பி. பதவிக்காவது பிரதமர் நியமிக்கலாம் என்று டில்லி வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது.

இனப் பிரச்சினைக்கான விசேட ஆலோசகர் பதவிக்கு இரண்டு பேரின் பெயர்கள் டில்லி வட்டா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமணத்திற்கு போனவர்கள் காட்டில் மரம் வெட்டினர்!

யாழ்ப்பாணம், மார்ச் 24

திருமண வைபவத்திற்கு சென்றவர்கள் இடைவழியில் காட்டில் மரம் வெட்டினார்கள்.

இந்தச்சம்பவம் வவுனியா பறையனாலங்குளம் பகுதியில் நேற்றுக் காலை நடந்தது.

இரண்டு வாகனங்களில் சென்ற திருமணக் கோஷ்டி ஒன்றுக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது.

இரு வாகனத்திலும் மொத்தம் 42 பேர் இருந்தனர். அவர்களில் 14 பேர் பெண்கள். ஐந்து பேர் குழந்தைகள்.

பறையனாலங் குளத்தில் ஆயுதப்படை முகாம்பகுதியில் அவர்களது வாகனங்கள் மறிக்கப்பட்டன.

அனைவரும் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

ஆண்களிடம் கோடரிகள் வழங்கப்பட்டன. காட்டுமரங்களை தறிக்கும்படி அவர்கள் பணிக்கப்பட்டனர்.

பின்னர் அவர்களுக்கு மதிய போசனமும் வழங்கப்பட்டது.

"நீங்கள் புலிகளுக்கு கொடுக்கும் சாப்பாட்டைவிட எமது சாப்பாடு நன்றாக இருக்கின்றதா?" என்று அவர்களிடம் வினவப்பட்டதாம்.

# கடும் தேடுதல்

## கட்டைபறிச்சானில் பத்துப் பேர் படுகாயம்

திருகோணமலை, மார்ச் 24

மூதூர் கட்டைபறிச்சானில் நேற்றுக் காலை சிருடையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பத்துப்பேர் படுகாயமடைந்தனர். உயிரிழந்தோர் பற்றிய விபரம் ஏதும் தெரியவில்லை.

நேற்றுக் காலை 7 மணிக்கு கட்டைபறிச்சான் முகாமைவிட்டு வெளியேறிய ஆயுதப்படையினர் சுமார் ஐந்து மணிநேரம் கிராமத்தைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

ஆங்காங்கே துப்பாக்கிப்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தேடுதல் நடத்திய சிருடையினருக்கு ஹெலிக்கொப்டர்கள் தாழப் பறந்து பாதுகாப்பு வழங்கின.

தேடுதல் வேட்டை,

(4 ஆம் பக்கம் பார்க்க)

### காயமடைந்தவர் மரணம்

நல்லூர், மார்ச் 24

துப்பாக்கிக் குண்டு காயங்களுடன் யாழ். ஆஸ்பத்தரியில் சேர்க்கப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் நேற்று மரணமானார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது காயமடைந்த கார்த்திகேசு (70 வயது) என்ற வயோதிபரே மரணமானவராவர்.

## ★ இந்திய விமானம் எங்கே?

புதுடில்லி, மார்ச் 24

இந்திய விமானப்படை விமானம் ஒன்று 19 பேருடன் நேற்று (சனிக்கிழமை) திடீரெனக் காணாமல் போனது.

ஜம்மு – காஷ்மீர் பகுதியில் பறந்து கொண்டிருந்த சமயம் கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்பை இந்த விமானம் திடீரென இழந்தது.

விமானத்தில் 15 இராணுவ வீரர்களும் 4 விமானச் சிப்பந்திகளும் இருந்தனர்.

மிகுந்த பனிபடர்ந்த ஜம்மு – காஷ்மீர் பகுதியில் தொடர்ந்து நேற்றும் இன்றும் தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

ஹெலிக்கொப்டர்களும், விமானங்களும் தேடுதலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.

ஆள் கடத்தலால் கலக்கம்:

# மட்டக்களப்பில்

# பதற்றத்தை தணிக்க

# பிரமுகர்கள் தீவிர முயற்சி

மட்டக்களப்பு, மார்ச் 24

ஆரையம்பதியிலும், காத்தான்குடியிலும் கடத்தப்பட்ட தமிழ், முஸ்லிம் நபர்களை விடுவிக்கும் முயற்சியில் அரசாங்க அதிபர், பிரசைகள் குழுவினர், மதத்தலைவர்கள் ஆகியோர் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை இருதரப்பில் இருந்தும் எவரும் விடுவிக்கப்படவில்லை.

கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் முறையே முஸ்லிம், தமிழ் நபர்கள் மாறிமாறிக் கடத்தப்பட்டனர். (விவரம் 2ஆம் பக்கத்தில்).

இச்சம்பவங்களைத் தொடர்ந்து மட்டக்களப்பிலும் காத்தான்குடியிலும் கடந்த இரண்டு தினங்களாகக் கடும் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, காத்தான்குடி ஆகிய பகுதிகளில் இன்று கடைகள் மூடப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்தும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அடகு நகைகளை மீள

## ஒப்படைக்க முழுப் பாதுகாப்பு

### தூதுக்குழுவிடம் பிரிகேடியர் உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 24

அடகு வைத்தோர்களின் நகைகளைத் தாமதம் இன்றி திருப்பி ஒப்படைப்பதற்குத் தேவையான பாதுகாப்பு வழங்குவதாக யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரி பிரிகேடியர் எம். எப். ருபசிங்ஹ மக்கள் வங்கியின் யாழ் பிராந்திய முகாமையாளருக்கு அறிவித்திருக்கின்றார்.

அடகு வைத்தோர் சங்கத் தூதுக்குழு ஒன்று இணைப்பு அதிகாரியை பலாலி ராணுவ முகாமில் கடந்த சனிக்கிழமை சந்தித்தது.

அதைத் தொடர்ந்தே இணைப்பு அதிகாரி இக்கடிதத்தை யாழ் மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளருக்கு அனுப்பி வைத்தார்.

கடிதத்தில் இணைப்பு அதிகாரி கூறியிருப்பதாவது;

இன்று (22-3 86) காலை அடகுவைத்தோர் சங்கப் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்தனர்.

அடகு வைக்கப்பட்ட நகைகளை காலதாமதம் இன்றி அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதற்குத் தேவையான பாதுகாப்பை மக்கள் வங்கிக்கு எமது தலைமைக் காரியாலயம் வழங்கும்.

இப்படி நான் அடகு வைத்தோர் சங்கத் தூதுக் குழுவுக்கு உறுதியளித்து உள்ளேன்.

இப்படி இணைப்பதிகாரி கடிதத்தில் கூறியிருக்கிறார்.

கடிதத்தின் பிரதிகளை இணைப்பதிகாரி, மக்கள் வங்கி பொது முகாமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
24- 3- 1986
திங்கட்கிழமை
சுபநேரம்:
12.16 முதல் 1 46 வரை
ராகுகாலம்:
7.46 முதல் 9.16 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## வவுனியாவில் சோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 24

வவுனியா கச்சேரி, ஆஸ்பத்திரி ஆகியவற்றிற்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட தடைமுகாம்களில் நேற்று முதல் 24 மணி நேரமும் சோதனைகள் நடைபெறுகின்றன.

# முல்லைத்தீவில்

## தொடர்ந்து பதற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச் 24

முல்லைத்தீவு முகாம் பகுதியில் நேற்றும் பதற்றம் நிலவியது.

கறுப்புநிற உடைஅணிந்த ஆயுதப்படையினர் முகாமைவிட்டு கவச வாகனங்களிலும் நடைபவனியாகவும் புறப்பட்டபொழுது ஆங்காங்கே துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் குண்டு வெடிப்புச் சத்தங்களும் கேட்டன.

அச்சமயம் முகாமிலிருந்து மோட்டார் ஷெல் தாக்குதலும் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இதேவேளையில் முல்லைத்தீவு கடற்பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள பீரங்கிக் கப்பலிலிருந்து நேற்று முன்தினம் இரவு பீரங்கிவேட்டுகள் தீர்க்கப்பட்டதாக அறிய வருகிறது.

முச்சந்தி மூலி



இனப்பிரச்சினையும் தீர்ந்தபாடில்லை, பண்டாரியும் விட்டுப் போன பாடில்லை என்ட பெருங் கதையாய் போச்சுதே எங்கடை நிலை; என்ன செய்வோம்...!

# டாக்டர்களும்

## வேலை நிறுத்த முஸ்தீபு!

கொழும்பு, மார்ச் 24

பதவியிழந்ததாகச் சொல்லப்படும் தாதிமாருக்கு ஆதரவாக அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடமை புரியும் டாக்டர்களும் வேலை நிறுத்தத்தில் குதிப்பர்.

இதுபற்றி நேற்றிரவு இறுதி முடிவு எடுப்பதாக இருந்தது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட 7 ஆயிரம் தாதிமார் பதவியிழந்தவர்களாகக் கருதப்படுவர் என அரசாங்கம் ஏற்கனவே அறிவித்தது தெரிந்ததே.

இவர்களுக்கு ஆதரவாக டாக்டர்களும் ஒரிரு தினங்களில் வேலை நிறுத்தத்தில் குதிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கை மீது இந்தியாவின் கடும் போக்கு மிக அவசியம்

## தினேஷ்சிங் வலியுறுத்து

புதுடில்லி, மார்ச் 23

இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை மீது கடும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் திரு. தினேஷ்சிங், இந்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றார்.

இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரான திரு. தினேஷ்சிங், இந்திரா தலைமையிலான அமைச்சரவையில் வெளிவிவகார அமைச்சராக பணிபுரிந்தவர்.

இந்திய நாடாளுமன்றத்தில் பேசுகையில் திரு. தினேஷ்சிங் மேலும் சொன்னதாவது:

இலங்கையில் இடம் பெறும் இனக்கொலை இந்திய மக்கள் மத்தியில் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை விஷயத்தில் இந்தியா அதிகமாக விட்டுக் கொடுத்து விட்டது.

அக்காலத்தை ராணுவ பலத்தைப் பெருக்கவே இலங்கை அரசு பயன்படுத்தியது.

கடற்படை, விமானப்படை, இராணுவம் ஆகியவற்றைக் கொண்டு தனது சொந்த மக்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையிலும் புதிய முகாம்

கல்முனை, மார்ச் 24

அம்பாறை மாவட்டத்தில் சவளக்கடைச் சந்தியில் ஆயுதப்படை முகாம் ஒன்று கடந்த சனிக்கிழமை மாலை திறக்கப்பட்டது.

இதன் காரணமாக கொலனிப் பகுதி, அம்பாறைப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் வீதியால் மட்டக்களப்புக்கு போய் வரும் சூழ்நிலை பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

# பிரசைகள் குழு உறுப்பினருக்கு ஏற்பட்ட அபாயம்!

மட்டக்களப்பு, மார்ச் 24

தமிழ், முஸ்லிம் நபர்கள் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்ற நிலையைத் தணிக்கும் முயற்சியில் ஈடுபட்ட மட்டக்களப்பு பிரசைகள் குழுப் பிரமுகர் ஒருவருக்குக் கசப்பான அனுபவம் ஏற்பட்டது.

தமிழரான அவரைச் சனிக்கிழமை இரவு கடத்திச் செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், முஸ்லிம் மதப் பிரமுகர்களின் தலையீட்டினால் அந்த முயற்சி கைவிடப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இதற்கிடையில் "காத்தான்குடியைக் காப்பாற்றப் படைதிரட்டுவோம்" என்ற கோஷம் காத்தான்குடியில் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

இந்தப் படையில் சேர்வதற்கு முஸ்லிம் இளைஞர்கள் ஓர் இடத்தில் கூடுமாறும் கேட்கப்பட்டது.

அதற்கு இணங்க நேற்று மாலை உத்தேச "படை"க்கு ஆட்சேர்ப்பு நடந்ததாகச் சொல்லப்பட்டது.

இதற்கிடையில் மட்டக்களப்பு நகரத்தின் எல்லைப் பகுதிகளில் உள்ள தமிழ் மக்கள் பீதியினால் வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்துள்ளனர்.

## கோயில் கோபுரம் 'சென்றி'யானது

மட்டக்களப்பு மார்ச் 24

சந்திவெளியில், முறக்கொட்டாஞ்சேனையில் பழமை வாய்ந்த மகா விஷ்ணு ஆலயம் ஒன்று உண்டு அங்குள்ள மணிக்கூண்டுக் கோபுரம் இப்போது "சென்றி" கோபுரமாக மாறிவிட்டது

கோயில் பணி கழற்றப்பட்டு, மண் மூடை

(4 ஆம்பக்கம் பார்க்க)

# இலங்கை நாடு சிங்களவர் தாயகம்

## ஜனாதிபதி வலியுறுத்துகிறார்

கொழும்பு, மார்ச் 24

இலங்கை, சிங்களவரின் தாயகம்.

சிங்களவரின் சொந்த மண் இலங்கை.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன சொன்னார்.

ரன்தெனிகல திட்டத்தை ஜனாதிபதி நேற்றுத் தொடக்கி வைத்தார்.

திரு. ஜெயவர்த்தன சொன்னதாவது;

மகாவலி அபிவிருத்தித் திட்டமும் சிங்களவருக்கே உரியது.

சிங்களவர்கள் இலங்கையை விட்டால் வேறு எங்கும் அகதிகளாகப் போக முடியாது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தீவிரவாதம் ஒழிக்கப்பட்ட பின்னர் தான் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படும்.

இப்படி திரு ஜெயவர்த்தன அறிவித்தார்.

# இஸ்ரவேல் ஆலோசகர்

## இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு

புதுடில்லி, மார்ச் 23

இலங்கையில் உள்ள இஸ்ரவேல் ஆலோசகர்கள் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ளதாக 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே வளர்ந்து வரும் ராணுவ உறவுகளில், இஸ்ரவேல் ஆலோசகர்களின் பாகிஸ்தான் விஜயம் புதிய பரிமாணம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் கருதுகின்றன.

மொஸாட், ஷின்பாத் உளவு ஸ்தாபனங்களைச் சேர்ந்த இஸ்ரவேல் ஆலோசகர்களே பாகிஸ்தானுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார்கள்.

இஸ்ரவேல் அல்லாத

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் அனுபவம் சங்கீதாவுக்கு இல்லையாம்!

'மைதிலி என்னைக் காதலி' படத்தின் மூலம் பிரபல்யமானவர் சங்கீதா. இப்படத்தில் ராஜேந்தரின் முறைப்பெண்ணாக நடித்தார் இவர்.

நல்ல அழகான தோற்றம் உடையவர். பொன்நிறம். அளவான உயரம். உயரத்திற்கு ஏற்ற உடற்கட்டு. எப்பொழுதும் முகத்தில் புன்னகை தவழும்.

கல்லூரி மாணவியான சங்கீதா காதல் காட்சிகளில் நெருங்கி நடிக்கக் கஷ்டப்படுகிறாராம்.

தினசரி சினிமா

அவர் இதுபற்றிக் குறிப்பிடுகையில்;

நான் கல்லூரி மாணவி என்றாலும், காதல் அனுபவம் இல்லாதவள் காதலன்-காதலி சேட்டை அனுபவங்கள் சினிமாவில் தான் கிடைத்தன.

காதல் காட்சியில் கதாநாயகன் என்மீது கை வைத்தபோது, ஏதோ 'கஷ்ட' மாக இருந்தது ராஜேந்தர் சத்தம் போட்டு என்னை நடிக்க வைத்தார்.

இன்னும் அந்தநிலை மாறவில்லை. போகப் போக எல்லாம் சரியாகிவிடும் என்று தோழிகள் சொல்கிறார்கள்.

'மைதிலி என்னைக் காதலி'யில் நீச்சல் உடையில் நடித்தேன். டைரக்டர் காட்சியின் அவசியத்தை விளக்கியதால் நடித்தேன். தொடர்ந்தும் என் நிலை அதுவேதான்.

கதைக்கு அப்படி ஒரு கட்டம் அவசியம் என்றால், நீச்சல் உடையில் நடிப்பது தவறு இல்லை என்றே நினைக்கிறேன்.

அப்படி ஒரு காட்சி வலுக் கட்டாயமாகத் திணிக்கப்படுமானால், நிச்சயம் நடிக்கமாட்டேன். அதனால் ஏற்படும் எந்த ஒரு விளைவையும் ஏற்கத்தயார்.

படத்துக்காக எல்லாப் படங்களிலும் நடிக்க மாட்டேன். எனக்குக் காசு முக்கியம் இல்லை. பெயர் தான் முக்கியம். நல்ல பெயர் வாங்கினால் தானே என்னை அறிமுகப்படுத்திய ராஜேந்தருக்குப் 'பெருமை' என்று சொன்னார் சங்கீதா.

# வாய்ப்பு அற்றோருக்கு பயன் எட்ட வேண்டும்

## பிரதமர் ராஜீவ் விருப்பம்

புதுடில்லி மார்ச். 23

வாய்ப்புகள் குறைந்த இடங்களில் வாழும் மக்களுக்குப் பணிகளின் பலன் எட்டவேண்டும்.

மேற்கண்டவாறு பாரதப்பிரதமர் ராஜீவ்காந்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆமதாபாத்தில் கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்றில் பேசும்போதே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்;

கட்சிப் பிரதிநிதிகள் அந்த இடங்களுக்குச் சென்று பார்த்து வரட்சி மற்றும் பற்றுக்குறைப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய வேண்டும்.

அத்துடன் இது தொடர்பான அறிக்கையொன்றும் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

**வெளி உலகில்**

ஜனதா மற்றும் பாரதிய ஜனதாக் கட்சிகளின் மாநில உறுப்பினர்களும் வரட்சி மற்றும் வறுமை போன்றவற்றை எதிர்த்துப் போராடுவதற்கான நடவடிக்கைகள் பற்றிய மகஜரொன்றையும் பிரதமரிடம் கையளித்தனர்.

குஜராத் மாநிலத்தின் பல பகுதிகளையும் சுற்றிப் பார்வையிட்ட பிரதமர் ஆமதாபாத்தில் பத்திரிகையாளர் கூட்டமொன்றிலும் உரையாற்றினார்.

பஞ்சாப் கலவரநிலை பற்றி அங்கு கேட்கப்பட்டபோது;

மத்திய அரசு பஞ்சாப்பில் தலையிடாது என்றும் பஞ்சாப் மாநில அரசே கலவரங்களை அடக்கி சுமுக சூழ்நிலையை உருவாக்க முயற்சிக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

## தெ. ஆபிரிக்க அரசுக்கெதிராக தடை அவசியம்

### பாரதப் பிரதமர் ராஜீவ்

தெ. ஆபிரிக்க இனவாத அரசுக்கெதிரான கட்டாயத் தடைகளை விரிவான அடிப்படையில் விதிக்க வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கையை பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இவ் ஒதுக்கலை எதிர்க்கும் சிறப்புக் குழுவின் கூட்டத்துக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியிலே பிரதமர் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

அவர் தமது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தென் ஆபிரிக்காவில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருவதாக தன்னுடன் பொருளாதார உறவு கொண்டிருக்கும் நாடுகளிடம் பிரிட்டோரியா கூறி வருகிறது.

எனினும் சகல இனங்களுக்கும் சமமான உரிமைகளை வழங்குவதில் பிரிட்டோரிய அரசு நடவடிக்கைகள் எதுவும் எடுத்ததாக இல்லை.

தென் ஆபிரிக்காவின் பெரும்பான்மை இன மக்களின் நியாயமான உரிமைகளை அணிசேரா நாடுகள் அமைப்பு தொடர்ந்து ஆதரிக்கும்.

இவ்வாறு பிரதமர் ராஜீவ் தமது செய்தியில் விளக்கியுள்ளார்.

பிரதமரின் செய்தியை பாரத அரசின் தூதுவர் நடராஜன் கிருஷ்ணன் குழுவின் கூட்டத்தில் வாசித்தார்.

## பங்களாதேஷ்

# தேர்தல் அட்டவணை திருத்தப்பட்டது

### ஜனாதிபதி எர்ஷாட் அறிவிப்பு

டாக்கா, மார்ச் 23

பங்களாதேஷில் மே மாதம் 7ஆம் திகதி நடத்தத்திட்டமிட்டுள்ள பொதுத் தேர்தலுக்கான அட்டவணையை தேர்தல் ஆணைக்குழு - திருத்தம் செய்துள்ளது.

ஏப்பிரல் மாதம் 6-ம் திகதிவரை வேட்பாளர்கள் தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச, துணைப் பிரதேச மற்றும் மாவட்ட நிர்வாக பொறுப்புகளிலிருந்த இராணுவ அதிகார பதவிகளும் அலுவலகங்களும் அகற்றப்பட்டுவிட்டதாகவும் ஜனாதிபதி எர்ஷாட் அறிவித்துள்ளார்.

எல்லா இராணுவ நீதிமன்றங்களையும் அகற்றிவிட்டதாக அறிவித்த ஜனாதிபதி விசாரணை முடிவடையாத வழக்குகள் குற்றவியல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பங்களாதேஷில் அடிப்படை உரிமைகளை மீண்டும் ஏற்படுத்த வேண்டும். சிறையில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களை அரசு விடுதலை செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்தால் தேர்தலில் தாம் பங்கேற்பது பற்றி யோசிக்க முடியும் என எதிரணிகள் ஏற்கனவே அறிவித்திருந்தன.

எதிரணிகளைத் தேர்தல்களில் பங்குபற்றச் செய்யும் கருத்துடனேயே எர்ஷாட் இந்த நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஒருங்கிணைந்து போட்டியிட 15 கட்சிக் கூட்டணி முடிவு செய்துள்ளது.

# அணு ஆயுத சோதனையை நிறுத்த வேண்டும்

### ஜனாதிபதி றேகனிடம் காங்கிரஸ் உறுப்பினர் பலர் வேண்டுகோள்

வாஷிங்டன், மார்ச், 23

நிவேடாவில் நடத்தத் திட்டமிடப்பட்ட அணு ஆயுத சோதனையை நடத்தாமல் நிறுத்தி வைக்கவேண்டும்.

இவ்வாறு அமெரிக்க காங்கிரஸ் சபையின் 50க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஜனாதிபதி றேகனைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அவர்கள் தமது வேண்டுகோளில்; அணு ஆயுத சோதனைக்கு சோவியத் யூனியன் விதித்துள்ள தடையுடன் அமெரிக்காவும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டுமெனவும் மேலும் வலியுறுத்தியுள்ளனர்.

விண்வெளிப் போர், நட்சத்திர யுத்தம் திட்டத்துக்கான லேஸர் கருவி தயாரிப்புடன் அமெரிக்காவின் அணு ஆயுத சோதனைகளுக்கும் தொடர்புகள் இருப்பதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

### சைபிரஸ் பிரச்சினைக்கு தீர்வு வேண்டும்

ஏதென்ஸ், மார்ச் 23

சைபிரஸ் பிரச்சினைக்குத் தீர்வுகாண கிரேக்கமும் துருக்கியும் உடனடியாக பேச்சு நடத்த வேண்டும்.

இவ்வாறு பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி சேர் ஜிப்றி ஹோ தமது ஏதென்ஸ் விஜயத்தின் போது வலியுறுத்தியுள்ளார்.

கிரேக்க பிரதமருடனும் இவ்விடயம் தொடர்பாக அவர் விவாதம் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

31ம் நாள் நினைவஞ்சலி



திரு. கந்தசாமி அசோகநாதன்
(சட்டத்தரணி)

தோற்றம்: 18-09-1948 மறைவு: 22-02-1986

உங்கள் நினைவு எங்கள் மனதை விட்டு என்றும் மறையாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனை வேண்டுகின்றோம்.

தாய், மனைவி, மகள், சகோதரர்கள்.

'கோகுலம்', தென்னியன் தோட்டம், அல்வாய். சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# பாதுகாப்புச் செலவுக்கு மேலும் 200 கோடி ரூபா

கொழும்பு, மார்ச் 24

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மேலும் 200 கோடி ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

எனினும் பாதுகாப்பு அமைச்சு கேட்ட நிதியிலும் பார்க்க 100 கோடி ரூபா குறைவாகவே ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இத்தொகையில் 25 லட்சம் ரூபாவை திறைசேரி வழங்கியது.

இதனிடையில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் தூதுவர்களை அழைத்து நிதி அமைச்சர் விருந்துபசாரம் ஒன்றை நடத்தினார்.

அதிகரிக்கும் பாதுகாப்புச் செலவினம் ஒருபுறம்; தேயிலையின் விலை வீழ்ச்சி ஒரு புறம் அரசின் நிதி நெருக்கடியைக் கூட்டியுள்ளது — இப்படி நிதி அமைச்சர் தூதுவர்கள் மத்தியில் பேசுகையில் சொன்னார்.

## படகில் வந்த ஆயுதங்கள் பற்றி அத்துலத்

கொழும்பு, மார்ச் 24

ஒரு வாரகால இடைக்கால போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னர், ஆயுதங்களுடன் இலங்கை வந்துகொண்டிருந்த இரண்டு படகுகளை கடற்படையினர் கைப்பற்றினர்.

இப்படியான தகவல் ஒன்றை வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனம் ஒன்றுக்கு தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி வெளியிட்டுள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக முழு விவரங்களையும் வெளியிட முடியாது என்றும் அமைச்சர் சொன்னார்.

விமானத் தாக்குதல்களை அரசு ஒருவாரம் இடைநிறுத்தும்: தீவிரவாதிகளும் ஆயுதங்களை நாட்டுக்குள் கடத்திக் கொண்டு வருவதை நிறுத்த வேண்டும்.

இப்படி அமைச்சர் இடைக்கால போர் நிறுத்தத்துக்கு நிபந்தனை விதித்து இருந்தது தெரிந்ததே.

## 2 முஸ்லிம்களுக்கு பதில் 6 தமிழர் கடத்தல்

### ஆரையம்பதியில் பதற்றம்

மட்டக்களப்பு, மார்ச் 24

2 முஸ்லிம்கள் காணாமற்போனதைத் தொடர்ந்து ஆரையம்பதியைச் சேர்ந்த 6 தமிழர் நேற்று முன்தினம் கடத்தப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து காத்தான்குடி, ஆரையம்பதி பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

மார்ச் 20 இல் ஆதம் லெப்பை, முகமது ஹனிபா ஆகியோர் கடத்தப்பட்டனர். அவர்கள் பற்றிய விவரம் இன்னும் தெரியாத நிலைதான் நேற்று வரை நிலவியது.

இந்தநிலையில் சனியன்று 6 தமிழர்கள் கடத்தப்பட்டனர். இவர்களில் 3 பேரின் பெயர்கள் தான் இது வரையில் கிடைத்தன.

குலநாயகம், ஜீவரத்தினம், யோசப் ஆகியோரே அவர்கள்.

இதனிடையில் முஸ்லிம் பிரமுகர்கள் வெள்ளி நள்ளிரவு பள்ளிவாசல் மூலம் விடுத்த வேண்டுகோள் ஒன்றில், அமைதி காக்கும்படி முஸ்லிம் மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் தமிழருக்குச் சொந்தமான லொறி ஒன்று பொருள்களுடன் காத்தான்குடியில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக அரசாங்க அதிபருக்கு முறையிடப்பட்டது.

மட்டக்களப்பு பிரஜைகள் குழுவினரும் காத்தான்குடி மதப் பிரமுகர்களும் கூட்டாக சமரச நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 24

இன்றைய உலகில் பெண்கள்' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நாளை நோன்மதி தினத்தில் காலை 9.30 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும்.

திருமதி சர்வமங்களம் கைலாசபதி சிறப்புரை ஆற்றுவார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ். கிளையின் ஆதரவில் இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது.

## அச்சுவேலி சீர்திருத்த பாடசாலையில் கொள்ளை

யாழ்ப்பாணம், மார்ச் 24

அச்சுவேலி சீர்திருத்தப் பாடசாலையில் பொருள்கள், பணம் ஆகியவை கொள்ளை இடப்பட்டுள்ளன.

19ஆம், 20ஆம் திகதிகளில் இந்தச் சம்பவம் நடந்தது.

19ஆம் திகதி நடந்த சம்பவத்தில் பாடசாலை அதிபரையும், காவலாளியையும் ஆறு இளைஞர்கள் அறை ஒன்றுக்குள் விட்டுப் பூட்டிவிட்டு டெலிவிஷன், மின்விசிறி, ரேடியோ, மின்சாரப் பாவனைப் பொருள்கள் ஆகியவற்றை எடுத்துச் சென்றனர்.

இவற்றின் பெறுமதி ரூபா 25ஆயிரம்என உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

20ஆம் திகதிச் சம்பவத்தில் அப்பாடசாலையில் மிகுதியாக இருந்த பொருள்களுடன் 1500 ரூபாவும் அபகரிக்கப்பட்டது.

1958ஆம் ஆண்டு தமிழ்பேசும் சிறுவர்களுக்காக வாதாடி ஸ்தாபிக்கப்பட்ட ஒரே பாடசாலை இது என்பது குறிப்பிடத்தக்கது.

கொள்ளை இடப்பட்ட பொருள்களோடு சம்பந்தப்பட்டோர் திருப்பி ஒப்படைக்குமாறு அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**JAFFNA Y.W.C.A.**
(Trimmer Hall Premises)

We offer Hostel facilities to (a) Medical Students (b) Working Girls (c) Advanced Level Students at moderate rates. Applications should be forwarded to the President, Jaffna, Y.W.C.A., before 30th April, 1986. L. T. Jesudasan, President.

**விற்பனையாகிறது!**

ஆண்டு 2 மாணவர் மதிப்பீடு பாடசாலைகளுக்குத் தேவையான படிவங்களை எம்மிடம் பெறலாம். ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

**விற்பனையாகிறது!**

"மூலிகை" குடும்ப மருத்துவ ஏடு. விலை; 5 -

பதினொராவது ஆண்டு நினைவலைகள்



சோதி அரியரட்ணம்

மறைவு: 25-03-1975

கொஞ்சுமொழிக் கிளியிருந்து பறந்துபோன கூண்டினிலே ஆண்டு பதினொன்றாய் நாங்கள்
நெஞ்சினிலே நினைவெழுதி வாழுகின்றோம்.
நிலவு முகம் சோதியெழில் மொழியின் செந்தேன்
பஞ்சினிலும் தாய்மையுறும் பிஞ்சு உள்ளம் பாசத்தின் அரவணைப்பும் மறவோம் அம்மா
குஞ்சுகளெம் கண்ணீரைத் துடைப்பாய் தாயே
குலவுசுக பேரின்ப உலகில் வாழ்வாய்.

25-03-1986 செவ்வாய் காலை 6-15 மணிக்கு யாழ். ஆசனக் கோயிலில் நடைபெறும் திருப்பலியில் பங்குபற்றுமாறு பணிவுடன் வேண்டும்:

பி. ஏ. அரியரெட்ணமும் மக்களும்.

21, பிளச்சர் வீதி,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

முதலாவது ஆண்டு



அன்னை மடியில்: 07-06-1966 இறைவன் அடியில்: 03-04-1985

திவசம்: 24-03-86

பண்புடனும் பாசத்துடனும்-இன் சொல்லுடனும் வாழவேண்டிய நீ அன்பினாலும் செல்லக் கதைகளினாலும் அனைவரையும் ஆட்சி கொண்டு – இன்று எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டதேனோ? உன் பாச உள்ளங்கள் ஏங்குதம்மா. மீண்டும் எம்மிடத்தில் தோன்றுயோ?

என மகனின் பிரிவால் வாடும் பெற்றோர்: திரு. திருமதி நமசிவாயம்,
அன்புத் தங்கையைப் பிரிந்து ஏங்கும் சகோதரங்கள்: உதயகுமார், புஷ்பலதா, ஜீவகுமார்.

'உதயகிரி', நெடுங்கண்டல், அடம்பன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

பலவற்றின் கலப்பான தத்துவ ஆராய்ச்சியை, வரட்டு வாதத்தை விட்டுவிடுங்கள். தாக்கத்தின் மூலம் இறைவனை அறியும் திறமை பெற்றவர் யார்?

-- அன்னை சாரதாதேவி.

# இணைப்பு-'சி'யை கைவிட்டவரே இப்போது தூக்கிப் பிடிக்கிறார்

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073

24-03-86 த. பெ. 23

## தென் இலங்கையிலும் அராஜகப் பூதம்!

கடந்த ஒரு வார காலமாக, அரசாங்க ஆஸ்பத்திரிகளில் தாதிகளின் வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது விளைவு: தென்னிலங்கையில் உள்ள பல ஆஸ்பத்திரிகளில், நோயாளர் சிகிச்சை பெற முடியாத கஷ்ட நிலை ஏற்பட்டிருக்கிறது.

நோயாளர் கஷ்டமுறுவதால் வேலைநிறுத்தம் எவ்வளவு விரைவில் கைவிடப்படுகிறதோ அவ்வளவுக்கு நல்லது. ஆனால் அரசாங்கம் அந்த நன்னோக்கோடு இவ்விஷயத்தைக் கையாள்வதாகத் தெரியவில்லை.

தாதிகள், தமக்குச் சில அலவன்ஸுகளை வழங்கக் கோரியே வேலைநிறுத்தம் செய்கிறார்கள் தாதிகள் செய்யும் பணியை மற்றவர்கள் இலகுவில் செய்துவிட முடியாது. அதற்கும் ஒரு பயிற்சி தேவை.

ஆகையால், நோயாளர் நலனைக் கருத்தில் கொண்டு அரசாங்கமும் தொழிற்சங்கமும் பேசி ஒரு நல்ல முடிவுக்கு வந்திருக்க வேண்டும். பேச்சுவார்த்தை மேசையில் விட்டுக் கொடுக்கும் மனப்போக்கும் இருசாராருக்கும் தேவை.

அரசாங்கம் தாதிகளின் குறைகளைக் கேட்டறிந்து வேலைநிறுத்தத்தைத் தீர்த்து வைக்க முயற்சித்ததாக இல்லை.

அதிகாரம் தனது கையில் குவிந்திருக்கிறது என்பதற்காக, தாதிகள் வேலைக்கு திரும்ப வேண்டும் என்று அடக்குமுறைத் தொனியில் கால அவகாசங்களை வரையறுத்தது. தாதிகளை எச்சரித்தது ஜம்பம் பலிக்கவில்லை.

தான் நிர்ணயித்த கால எல்லைக்குள் வேலைக்குத் திரும்பாத தாதிகள் வேலையிலிருந்து விலகியதாகக் கருதப்படுவர் என அறிவித்தது ஐக்கிய தாதிகள் சங்க அங்கத்தவர்கள் எடுபடவில்லை மீண்டும் வேலைக்குத் திரும்ப அவகாசம் வழங்கியது அரசு. தொழிற்சங்கத்தினர் அசையவில்லை.

பேச்சுவார்த்தை முயற்சி எதனையும் மேற்கொள்ளாது தொழிற்சங்கத்தினரை தமது வழிக்குக் கொண்டு வர அரசு எண்ணியது பயமுறுத்தலும் மிரட்டலும் பலிக்கவில்லை. உடனே தொழிற்சங்கத்தையே தடை செய்து விட்டது.

அவசர காலச் சட்டம் என்ற கோடரியால் தொழிற்சங்க உரிமையை நொடிப் பொழுதில் அரசாங்கம் வெட்டித் தறித்து விட்டது! அடக்குமுறை, அராஜகம் என்பவற்றின் முதற்கட்டம் அது.

தொழிற்சங்கம் உண்டாக்குவதும் கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்வதும் மனித அடிப்படை உரிமைகள். ஜனநாயகத்தின் ஆணி வேராகக் கருதப்படும் அடிப்படை உரிமைகள் குறித்து இந்த அரசாங்கத்துக்கு அக்கறை எதுவுமில்லை என்பது எவருக்கும் தெரியாதது அல்ல.

தமிழ் மக்களின் அரசியல் உரிமை விவகாரத்தில் அது அடிப்படை உரிமைகளை காலுக்குக் கீழ் மிதித்து நசுக்குவதை உலகமே உணரத் தலைப்பட்டு விட்டது.

ஜனநாயகம் என்ற போர்வையில் பெரும்பான்மை வாக்குப் பலம் என்ற முகமூடிக்குள் நின்று அராஜகம் புரியும் பாசிச ஆட்சி இங்கு நடைபெறுகிறது. தமிழ்ப் பகுதிகளில் மட்டுமல்ல தென் இலங்கையிலும் அதனை வலுப்படுத்த முடியும் என்பதற்கு விடுக்கப்பட்ட முதற் சவால் தொழிற்சங்கத் தடை.

தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியாத ஏலாத்தன்மையின் இறுதிக் கட்டமாக, தென் இலங்கையிலும் பாஸிசம் தலைதூக்கும் என்பதற்கு இது ஓர் அறிகுறி.

இனியாவது யு. என். பி. அரசின் உண்மைத் தோற்றத்தை தென்னிலங்கை மக்கள் கண்டுகொள்கிறார்களோ என்னவோ! அதனைக் கண்டு கொள்ளும் கெட்டித்தனத்தில் தான் அங்கு ஜனநாயகம் பிழைத்துக் கொள்ளும் வாய்ப்பு இருக்கும்.

தலையிடியும் தனக்குத் தனக்கு வந்தால் தான் தெரியும் என்று சொல்லப்படுவது உண்டு. தென்னிலங்கை மக்களுக்கு அந்தத் தலையிடியின் ஆரம்ப குணங்குறி இப்போது கண்டுள்ளது.

நேரகாலத்துடனேயே அந்த வியாதியைத் தீர்க்க மருந்து எடுக்கத் தவறினால், அவர்களையும் தமிழ் மக்களைப் போல் நிரந்தர நோயாளியாக்கி விடுவதற்கு அரசாங்கம் பின்னிற்காது.

நோய் வந்த பின் தீர்ப்பதை விட, அது வரும் முன்னர் தடுப்பது நல்லது என்பதைத் தென்னிலங்கை வாழ் ஜனநாயக விரும்பிகளும், தேசாபிமானிகளும் உணர்ந்து கொள்வது நல்லது. இல்லையேல் அங்கும் அராஜகப் பூதம் தலைதூக்குவது நிச்சயம்!

## அடுக்குமாடி சரிந்தது

பம்பாய், மார்ச் 23

பம்பாய் நகரிலுள்ள 4 அடுக்கு மாடி ஒன்று சரிந்து விழுந்ததால் 5 பேர் அதனுள் அகப்பட்டு இறந்துள்ளனர் மற்றும் 15 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

காயமடைந்த அனைவரும் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

முதலமைச்சர் எஸ். பி. சவான் விபத்து நடந்த இடத்தைச் சென்று பார்வையிட்டார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களையும் அவர் சென்று பார்வையிட்டார்.

மீட்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உண்மையில் அந்த இணைப்பில் கூறப்பட்டிருப்பது என்ன?

### கூட்டணித்தலைவர் சிவா விளக்கம்

இணைப்பு - சி, பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தனா இப்போது அடிக்கடி பேசுகிறார்

இணைப்பு - சி, 1985 ஆகஸ்டில் புதுடில்லியில் வைத்துத் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கை — ஆகியவற்றின் அடிப்படையில்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக திரு. ஜெயவர்த்தனா தற்சமயம் கூறிவருகின்றார்.

'இணைப்பு-சி'யில் உள்ள முக்கிய அம்சங்கள் என்ன? இது பற்றிய சில விவரங்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரம் 'இந்து' நாளிதழில் வெளியிட்டிருக்கிறார்

அதன் ஒரு பகுதி இன்று இங்கு பிரசுரமாகின்றது.

ஆகஸ்ட், 1983 இல் திரு ஜி. பார்த்தசாரதியை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் முதன் முதலாகச் சந்தித்தனர்.

அச்சமயம் மாநிலங்களின் கவுன்ஸில் சம்பந்தமான யோசனை உருவானது.

புதுடில்லியில் தொடர்ந்து நடைபெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து 'இணைப்பு-சி' என்ற யோசனைக்கு திரு ஜெயவர்த்தனாவும், திரு. பார்த்தசாரதியும் சம்மதித்தனர்.

ஒரு மாகாணத்தில் உள்ள மாவட்ட சபைகள் இன்னொரு மாகாணத்தில் உள்ள மாவட்ட சபைகளுடன் சேர்ந்து கொள்ள முடியாது என்று 'இணைப்பு-சி'யில் கூறப்பட்டுள்ளது என்று திரு. ஜெயவர்த்தனா இப்பொழுது அவசரப்பட்டுக் கூறுகின்றார்

இது சம்பந்தமாக அப்போது இடம்பெற்ற நிகழ்வுகளை திரு. ஜெயவர்த்தனா மறந்து இருக்க முடியாது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவட்ட சபைகள் ஒன்றாக இணைந்து ஒரு பிராந்திய சபையாக மாறும் உரிமை இருக்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் அச்சமயம் வற்புறுத்தினர்.

திருமதி இந்திரா காந்தி இவ்விஷயம் பற்றி திரு ஜெயவர்த்தனாவிடம் தொடர்பு கொண்டார்.

இதைத் தனது யோசனைகளில் ஒன்றாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்ன திரு ஜெயவர்த்தனா, சர்வகட்சி மாநாட்டில் இப்பிரச்சினையை எழுப்பினால்தான் அதை எதிர்க்க மாட்டார் என்றும் சொன்னார்.

இந்த உறுதிமொழிக்கு இணங்கவே தமிழர் விடுதலைக் கூட்டணி சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் சம்மதித்தது.

டில்லியில் இருந்து கொழும்பு சென்றதுதான் தாமதம், இணைப்பு-சி' ஐ தூக்கி எறிந்து விட்டு 'இணைப்பு-பி' ஐ உருவாக்கினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது திரு. பார்த்தசாரதி மீண்டும் கொழும்பு சென்றார். அதன் பின்னர் தான் சர்வகட்சி மாநாட்டுதஸ்தாவேஜுக்களில் ஒன்றாக 'இணைப்பு-சி' ஐயை திரு ஜெயவர்த்தனா அனுப்பி வைத்தார்.

சர்வகட்சி மாநாடு நடந்து முடியும் வரை 'இணைப்பு-சி' யை உருவாக்கிய கூட்டுப் பொறுப்பை திரு ஜெயவர்த்தனா ஏற்றுக் கொள்ளவில்லை.

'இணைப்பு-சி' அனாதையானது. இணைப்பு சி'யை தானும் திரு. பார்த்தசாரதியும் சேர்ந்து உருவாக்கினோம் என்று இப்போதாவது ஒப்புக் கொண்டாரே?

1984 ஏப்ரலில் இந்திய சஞ்சிகை ஒன்றுக்கு திரு. ஜெயவர்த்தனா பேட்டி அளித்தார்.

எல்லாரும் எதிர்க்கும் போது எப்படி நான் பிராந்தியக் கவுன்ஸில்கள் வேண்டும் என்பது? என்னால் தீர்க்க முடியும் என்று கூட்டணி சொல்கிறது. என்னால் முடியாது. சூழ்நிலைகளின் கைதியாக நான் உள்ளேன்.

'இணைப்பு-சி'யில் உள்ளவற்றில் 90 சதவீதமானவைதான் தனது தற்போதைய யோசனைகள் என்று திரு ஜெயவர்த்தனா இப்போது கூறுகின்றார்.

'இணைப்பு-சி' யில் 5 ஆவது பந்தியில் பிராந்திய கவுன்ஸில்களின் அதிகாரம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது;

சட்டவாக்க அதிகாரங்கள் பிராந்தியக் கவுன்ஸில்களிடம் ஒப்படைக்கப்படும். சட்டங்களை இக்கவுன்ஸில்கள் நிறைவேற்றலாம்.

கீழ் வரும் விஷயங்களைச் செயற்படுத்தும் அதிகாரங்களும் பிராந்தியக் கவுன்ஸில்களுக்கு இருக்கும்.

அந்த விஷயங்கள் வருமாறு;

- உள்நாட்டு சட்ட ஒழுங்கு பராமரிப்பு,
- நீதி பரிபாலனம்
- சமூக, பொருளாதார அபிவிருத்தி
- கலாசார, காணிக் கொள்கைகள்

பிராந்தியங்களுக்கு வழங்கப்படும் விஷயங்கள் விவரமாகத் தீர்மானிக்கப்படும்.

—இப்படி 'இணைப்பு-சி' யின் 5 ஆவது பந்தி கூறுகின்றது

'இந்து'வுக்கு அளித்த பேட்டியில் நிறைவேற்று அதிகாரங்கள், நீதிபரிபாலன அதிகாரங்கள் அதிகாரப் பரவலாக்கலின் கீழ் வழங்கப்படமாட்டா என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

பிராந்தியக் கவுன்ஸில் என்றோ, வேறு எப்படி அழைத்தாலும் அவை நிறைவேற்று மற்றும் நீதி பரிபாலன அதிகாரங்களைக் கொண்டு இருக்க மாட்டா. இருந்தும் திரு. ஜெயவர்த்தனா கூறுவது என்ன?

'இணைப்பு-சி'யில் உள்ளவற்றில் 90 சதவீதமானவற்றை தனது தற்போதைய யோசனைகள் கொண்டுள்ளனவாம்.

(தொடரும்)



**பொய்யாமொழி**

குறள்:

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

பொருள்:

ஒருவன் முன் செய்த நன்மையை மறப்பது அறன் அன்று; அவர் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறந்து விடுவது அறம் ஆகும்.

## நலிவுற்ற சைவத்தை வளர்க்க உருவான கோயில்

### வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத் தேர் இன்று

யாழ்நகரின் இதயம் போன்று அன்பர்களுக்கு வாழ்வு தரும் தையல்நாயகி சமேத வைத்தீஸ்வரன் ஆலயம் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் தோன்றிய சிறப்புமிக்க சிவாலயம்.

இது தமிழ் நாட்டிலுள்ள திருப்புள்ளிருக்குவேளூர் கோயிலின் அமைப்பில் தோன்றி அத்தலத்தின் சிவபெருமான் வைத்தீஸ்வரன் அம்பிகை தையல்நாயகி ஆகிய பெயர்களுடன் திகழ்வது.

விடிவெள்ளி போன்று இக்கோயில் தோன்றியது என்பதற்கு அக்காலச் சமய நிலையினை உணர்தல் வேண்டும்.

1505 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து நாட்டினைக் கைப்பற்றி 150 ஆண்டுகள்வரை ஆட்சி செய்த போர்த்துக்கேயர் காலத்தில் சைவத் தலங்கள் நலிவுற்று அழிந்தன.

திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர் போன்ற சைவப்பெரியோர் பசுவதை போன்ற பல கொடுமைகளைத் தாங்க முடியாது நாட்டை விட்டுப் பரதேசம் போயினர்.

போர்த்துக்கேயரை அடுத்து 1796 ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்தவர் ஒல்லாந்தர். இக்காலத்தில் கோபாலச் செட்டியாருக்கு அருமை மகனாக வைத்திலிங்கம் செட்டியார் பிறந்தார். அவர் கருவிலே திருவுடையவர்.

அக்காலத்து யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஒல்லாந்த தேசாதிபதியும் அவர் மனைவியும் குழந்தையில்லாக் குறையைப் போக்க, பேரழகு வாய்ந்த வைத்திலிங்கம்செட்டியாரைத் தத்த புத்திரனாகப் பெற்றோர் அனுமதியுடன் அன்புடன் வளர்த்தனர்.

வைத்திலிங்கச் செட்டியார் வளர்ந்து வாலிபனானதும் வளர்ப்புத் தந்தையாகிய மகாதேசாதிபதியினது அனுசரணையுடன் மன்னாரில் முத்துக் குளிக்கும் குத்தகையை ஏலத்திற் பெற்றுப் பெருஞ் செல்வந்தரானார்.

ஒல்லாந்தர் ஆட்சி முடிந்து தேசாதிபதியும் மனைவியும் நாடு திரும்பு முன் வைத்திலிங்கச் செட்டியார் சிவன் கோயில் கட்டுவதற்கு அனுமதி பெற்றுக்கொண்டார். இறைவன் கவினிலே கட்டளையிட்டபடி வண்ணார் பண்ணையிற் கோயில கட்டத் தீர்மானித்தார். புள்ளிருக்கு வேளூர் வைத்தீஸ்வரன் கோயிலைப் போலவே தானும் ஒரு கோயில் கட்டத் தொடங்கினார்.

எதிராளிகளது சூழ்ச்சியினாலே வைத்திலிங்கம் செட்டியாருடைய நண்பர் பனங்காமம் பிரதானியாகவிருந்த நல்லமாப்பாண வன்னியார் சிறை வைக்கப்பட்டார்.

வைத்திலிங்கச் செட்டியார் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் கட்டிக்கொண்டிருக்கும் போதே கொழும்பு

வே. ந. சிவராசா

சென்று அரசினருக்கு 12, 000 டொலர் பணம் கட்டி நண்பனைச் சிறை மீட்டு வந்தார்.

அந்த நன்றிக் கடனை ஈடுசெய்யுமுகமாக, நல்ல மாப்பாண வன்னியார் தனது காணியிலிருந்து 20,000 பனைமரங்களை வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் கட்டுவதற்குக் கொடுத்துதவினார். ஆலயத்தின் துணுக்காயிலுள்ள தராங்கலைடல் என்னும் கிராமத்தையே சிவன் கோயில் நித்திய பூசைச் செலவுக்குத் தானமாகக் கொடுத்தார்.

புள்ளிருக்குவேளூரைப் போலவே மூலமூர்த்திக்கு வைத்தீஸ்வரன் என்றும் அம்பாளுக்குத் தையல்நாயகி என்றும், தீர்த்தத்திற்குச் சித்தாமிர்தபுட்கரணி என்றும் பெயரிட்டு இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட சிற்பாசாரிகளினாலே ஆகம முறைப்படி அமைக்கப்பெற்ற சிவாலயமாக விளங்குகின்றது வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம்.

[illegible] காலப்பூசை நாளது வரை நடைபெறுகிறது.

பங்குனி உத்தர நாளன்று தீர்த்தத்துடன் முடிவடையுமாறு ஆண்டுதோறும் 22 நாட்களுக்கு வைத்தீஸ்வரப் பெருமானுக்கும், ஆடிப்பூரத்தன்று தீர்த்தத் திருவிழாவுடன் முடிவடையுமாறு தையல் நாயகி அம்பாளுக்கும் மஹோற்சவம் நடைபெறும். நவராத்திரி, திருவெம்பாவை முதலான விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஆகம முறைப்படி அமைக்கப்பெற்ற சிவாலயம் வண்ணை வைத்தீஸ்வரன்தேவஸ்தானம் என்பதனாலே நல்லை நகர் ஆறுமுக நாவலர் நாள்தோறும் சென்று வழிபாடியற்றிக் கதாப்பிரசங்கம் செய்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

நாவலருக்குப் பின் அவர் மருகர் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை புராணப் பிரசங்கங்களை அங்கேயே செய்து வந்தார்.

பின்பு கீதத்தை மிகப் பாடும் சங்கர சுப்பையரும், கொக்குவில் சைவப்புலவர் மணி த குமாரசுவாமிப்பிள்ளையும், நல்லை ஆதீனம் முதலாம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளும், திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்களும், பிரசங்கம் பஜனை, கூட்டுப் பிரார்த்தனை ஆகியவற்றை நிகழ்த்தி வண்ணை வைத்தீஸ்வரன் பேரருள் பெற்றனர்.

### புதிய நூல் வெளியீட்டு விழா

நல்லூர், மார்ச் 24

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நாளை 25 - 3 - 1986 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு 'சிவாலய சேவை ஏன்? எப்படி?' என்ற நூல் வெளியீட்டு விழா நடைபெற உள்ளது.

பண்டிதர் மு திரு. கந்தையா பி. ஏ. அவர்களால் எழுதப் பெற்ற இந்த நூல் யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் கலாநிதி க. வித்தியானந்தன் அவர்களால் வெளி[illegible] ஏழாலை, சைவசமய [illegible] இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ளது.

## அழகிய தேரேறி அன்னை பவனி வரும் காட்சி!

### இணுவை சிவகாமி அம்மன் ஆலயத்தில் இன்று

அழகிய தோட்ட வெளிகள், அருமையான குடியனைகள் மத்தியிலே உயர்ந்த அழகிய இராச கோபுரத்தையும், கவர்ச்சியான பணி மண்டபத்தையும் கொண்டு, சைவமும் தமிழும் தழைத்தோங்கும் இணுவையம்பதியிலே எழுந்தருளியிருக்கும் அன்னை சிவகாமி அம்மன், இன்று திங்கட்கிழமை அடியார்கள் அனைவருக்கும் தரிசனமளிக்கும் முகமாக ஏழுகுதிரைகள் பூட்டிய அழகிய தேரில் வீதி வலம் வருகிறாள்!

காணுதற்கு அரிய பேறு இது.

இவ்வாலயத்தின் பின் வீதியில் மாணிக்க வைரவரும், பத்திரகாளி அம்மனும் எழுந்தருளியுள்ளார்கள்.

இக்கோயிலின் எழில் மிகு கோபுரமும், அருமையான மணிமண்டபமும் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே பிரசித்தமான "சாத்திரம்மா" வின் முயற்சியாலமைந்தவை.

இவ்வாலயத்தில் நடைபெறும் விழாக்களில், சிவராத்திரி விழா, ஆடிப்பூர கற்பூரத் திருவிழா, நவராத்திரி விழா, நவசக்தி அர்ச்சனை, திருவிளக்குப் பூசை, மாக்கழித் திருவெம்பாவை என்பன குறிப்பிடத்தக்கன.

தேர், தீர்த்தோற்சவ நாட்களில் இணுவில் சிவகாமி அம்மன் அன்னதான சபையினர் அன்னதானம் வழங்குகிறார்கள். இது மிகப் பெரிய அளவில் ஒவ்வொரு வருடமும் நடைபெறும்.

மேலும் தியாக சத்திய ஜீவன சன்மார்க்க இயக்கம் திருவிழாக் காலங்களின் போது பஜனை செய்வார்கள்.

இணுவில் இந்து இளைஞர் பேரவையினர் காலத்திற்குக் காலம் இலவச சைவசமய வெளியீடுகள் வெளியிட்டுச் சமயத் தொண்டுகள் புரிந்துள்ளனர். அருள் மிகு அன்னை சிவகாமி தேரேறி வலம்வரும் இன்று இணுவையூர் சின்னத்தம்பி புலவர் இயற்றிய இணுவை சிவகாமி அம்மன் திருவூஞ்சற் பாடல்களைத் தமது இரண்டாவது இலவச ஆக்கங்கள் வெளியூடாக வெளியிடுகின்றனர்

— இணுவை இரகுபதி பாலஸ்ரீதரன்

## பண்டிதமணி ஞாபகார்த்த முயற்சி, ஆராய இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச், 24

அமரத்துவம் எய்திய மூதறிஞர், இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் ஞாபகர்த்தமாக செய்யக்கூடிய முயற்சிகள் பற்றி ஆலோசிப்பதற்காக நாளை கூட்டம் ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது.

வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் பண்டிதர் க. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நாளை முற்பகல் நடைபெறும்.

**வாசகர் திருமுகம்**

## புனர் வாழ்வு சேவை நிறுவனங்களுக்கு....

இன வன்செயலினால் பாதிக்கப்பட்டு, அகதிகளாக்கப்பட்டவர்களுக்கு புனர் வாழ்வு அளிக்கும் புனித பணியில் பல நிறுவனங்கள் செயல்படுகின்றன. போற்றப்பட வேண்டிய விஷயம்.

இப்பணியில் இயங்கும் நிறுவனங்களைத்தவிர, சமூக சேவை சங்கங்கள், மாணவர்ஒன்றியம், இளைஞர் மன்றங்கள், மகளிர் மன்றங்கள் என்று இன்னும் பலதரப்பட்டவர்களும், இப்பணியில் செயல்படுவதை அறியமுடிகிறது. இது வரவேற்கப்பட வேண்டியது தான். ஆனால் இச்சேவையையிட்டுச் சிந்தித்துச் செயல்பட வேண்டிய பாரிய பொறுப்பை இச்சேவையில் ஈடுபடுபவர்கள் ஏற்றுக்கொள்வது அவசியம்

வெளிநாடுகளில் இருந்தும் உள்நாட்டில் இருந்தும் இத்தரும கைங்கரியத்திற்குப் பெறப்படும் பணத்தையும், பொருள்களையும் நல்ல முறையில்பாதிக்கப்பட்ட மக்கள் பெற்று, புனர் வாழ்வு வாழக்கூடிய முறையில் பயன் படுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது கஷ்ட நிலையில் புனர் வாழ்வு பெற்று வாழ உதவும் ஒரு நிறுவனத்திடம் சென்று தமக்கேற்பட்ட பாதிப்பை உறுதிப்படுத்தி உதவி பெறுகிறார்கள்

பின் அவர்களே மற்றைய நிறுவனங்களுக்கும் சென்று பாதிப்பை உறுதிப்படுத்தி உதவி பெறுகிறார்கள். இது ஓர் மோசடியான செயல்.

புனர்வாழ்வு அளிக்கும் நிறுவனங்களும் தீர ஆராயாது ஒரு நிறுவனத்திடமிருந்து உதவி பெற்றவருக்கு மீண்டும் உதவி வழங்குகின்றன. பாதிக்கப்பட்ட சிலர் இப்படியான மோசடிகளைச் செய்து வருகிறார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும்.

இதேபோல் அகதிகளுக்கு உதவ நிதி சேகரிப்பவர்களும் மற்றைய

(4 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த நாள்—திருமண வைபவங்கள்,
பூப்புனித நீராட்டு விழா—புதுமனை புகு விழா
போன்ற மங்கல வைபவங்களைத்
தத்ருபமாக ஒளிப்பதிவு செய்துகொள்ள

வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

# உதயன்

24. 03. 1986 திங்கட்கிழமை

தமிழ், இந்தி, ஆங்கிலம்
ஒரிஜினல் வீடியோ பிரதிகளை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

# யாழ் ஏரியில் மீன் பிடிக்க நிபந்தனைகள் சில

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாண ஏரியில் மீன் பிடிப்போர் கடற்படையினரின் சமிக்ஞைகளுக்குப் பணிந்து செயல்படவேண்டும்.

மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

மீன் பிடிப் படகுகளில் டைனமட் வெடிகள் காணப்பட்டால் அல்லது வெடிக்க வைக்கப்பட்டால் படகுகளில் இருந்தவர்கள் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்

மீன்பிடிக்கச் செல்பவர்கள் தங்களின் அடையாளக் கார்ட்டுகளையும் கட்டாயமாக வைத்திருக்க வேண்டும்.

இதனிடையில் கடந்த இரண்டு தினங்களில் மீனவர்கள் என்ற பேரில் இரண்டு படகுகளில் சென்ற தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## முகாமுக்கு அருகில் சென்ற பெண்மணி
### துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

பருத்தித்துறை, மார்ச் 24

பருத்தித்துறை இராணுவ பொலீஸ் கூட்டு முகாமிலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் நடமாடிய பெண் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

தம்பசெட்டியைச் சேர்ந்த செல்வி. ஏ. நாகம்மா (வயது 40) என்பவரே இப்படிப் பரிதாபமாக மரணமடைந்தவராவார்.

கடந்த சனிக்கிழமை காலை 11 00 மணியளவில் ஆலடிப்பிள்ளையார் கோயிலுக்கு இப் பெண் வழிபடச் சென்றார்.

சம்பவம் நடந்த சமயம் இவர் முகாம் அருகாமையில் சென்றதாகக் கூறப்படுகிறது.

இந்த துப்பாக்கிச் சூட்டினால் பருத்தித்துறைப் பகுதியில் சற்று பதற்றம் ஏற்பட்டது.

இறந்தவரின் சடலத்தைப் பொறுப்பேற்க இதுவரை எவரும் இராணுவ பொலீஸ் கூட்டு முகாமிற்குச் செல்லவில்லை.

சடலம் சம்பவம் நடந்த இடத்திலேயே கிடப்பதாகத் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவம் பற்றி இறந்தவரின் உறவினர்கள் பருத்தித்துறை பிரஜைகள் குழுவுக்கு முறையிட்டுள்ளனர்.

## மட்டக்களப்பில் புதிதாக 3 முகாம்கள்

மட்டக்களப்பு, மார்ச் 24

மட்டக்களப்பு படுவான்கரை பகுதியில் ஆயுதப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்காக புதிதாக மூன்று ஆயுதப்படை முகாம்கள் திறக்கப்படவிருக்கின்றன.

வவுணதீவு, ஆயித்தியமலை, சிப்பிமடு ஆகிய இடங்களில்தான் இம் முகாம்கள் அமையவிருக்கின்றன.

இப்பகுதியில் ஏற்கனவே ஆயுதப்படை முகாம்களோ பொலீஸ் நிலையங்களோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

உலகில் அல்லலுறும் உயிரினங்களின் நலம் வேண்டி, குறிப்பாக தமிழினத்தின் துயர் நீங்கும் வகையில் தொடர்ந்து 15 நாட்களுக்கு ஏழாலை மத்தி அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்பாள் தேவஸ்தானத்தில் மண்டல மஹாபிஷேகமும், மஹா கும்பாபிஷேகமும் நடத்தப்படுகின்றன.

இன்று ஆரம்பமாகும் மண்டல மஹாபிஷேகம் எதிர்வரும் 7ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் எண்ணெய்க் காப்பு சாத்துதலும்.

நாளை மறுதினம் புதன் கிழமை பகல் 11-50 மணிக்கு மஹாகும்பாபிஷேகமும் நடைபெறும்.

## இயக்கங்களுக்கு பணிவான வேண்டுகோள்

10-3-86 அன்று இரவு இனந்தெரியாத சிலரால் துப்பாக்கி முனையில் எனது 86 ஸ்ரீ 8032 இலக்க 'சுசுக்கி' இன மோட்டார் பைசிக்கிள் எடுத்துச் செல்லப்பட்டு இன்னமும் திருப்பித்தரப்படாதுள்ளது.

மிக ஆபத்தான நிலையில், உயிருக்குப் போராடும் நிலையில் இருக்கும் ஒருவரைக் காப்பாற்றவெனக் கூறி இது எடுத்துச் செல்லப்பட்டது.

ஆஸ்த்துமா நோயினாலும், இருதய நோயினாலும் அவதியுறும் எனது தகப்பனாரை அடிக்கடி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும், மிகுந்த கஷ்டத்துடன் தனியொருவனாக நின்று தானே உழைத்து முன்னேற அது மிகவும் தேவைப்படுவதாலும்- எடுத்துச் சென்றவர்கள் தயவு செய்து அதைத் திரும்ப என்னிடம் தந்துதவும்படி மிகவும் பணிவுடன் வேண்டுகிறேன்.

இப்படிக்கு
வே. முத்துலிங்கம்.

தேவி அரிசி ஆலை
அச்சுவேலி

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்; நஷ்ப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட்,207 ,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 24-03-1986
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ60/N.86

## உள்ளூர் ஒளிபரப்பு; கிழமைக்கு 2 படங்கள் மட்டுமே
### புரிந்துணர்வு அடிப்படையில் கட்டுப்பாடு
### தமிழீழ மாணவர் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 24

போட்டா போட்டி அடிப்படையில் இன்று பல உள்ளூர் ஒளிபரப்பு நிலையங்களினால் ஒளிபரப்பப்படும் பயனற்ற படங்களினால் எமது இனம் சமுதாயம் பாதிப்படைகிறது.

ஆகவே ஒரு இடத்தில் கிழமைக்கு இரு படங்கள் மட்டும் ஒளிபரப்பும் படியான ஏற்பாடுகளை தம்முள் கையாண்டு அதன் அடிப்படையில் படங்களை ஒளிபரப்ப வேண்டும்.

தமிழீழ மாணவர் பேரவை (ரெசோ) இப்படிக் கோரிக்கை விடுத்திருக்கிறது.

புரிந்துணர்வு அடிப்படையில் இப்படி ஒளிபரப்பாவிடின் அதனை வலுக்கட்டாயமான முறையில் (ஒளிபரப்புச் செய்யாது) தடுக்க வேண்டிய நிலைக்கு உள்ளாவோம்.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் உருவாகியுள்ள உள்ளூர் தொலைக்காட்சி, இளைஞர்களையும் குறிப்பாக மாணவர்களையும் புரட்சி சிந்தனையற்ற, செயலூக்கமில்லா, படிப்பில் நாட்டமற்றவர்களாக, தொலைக்காட்சி பெட்டியின் முன் பயனற்ற பொழுதுபோக்குபவர்களாக உருவாக்கி வருகிறது.

இன்று நாம் கற்கும் கல்வியானது ஒருவர் சமூக அந்தஸ்தை பெறுவதற்காக கற்கின்ற ஏட்டுக் கல்வி என்பது உண்மை. இருந்தும் எமது மண்ணிற்கும் மக்களுக்கும் பயன்தரும் ஒரு கல்வி முறையினால் இவை மாற்றீடு செய்யப்படாத வரை இன்றுள்ள கல்வி முறையைக் குழப்புவதும் அதனைப் பாதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் நாம் எமது எதிர்கால சமூகத்திற்கு செய்யும் பெருந்தீங்காகும்.

இப்படி ரெசோ விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## ஆனையிறவில் தேடுதல் 10 இளைஞர்கள் கைது!

நல்லூர், மார்ச் 24

ஆனையிறவில், பெரிய தீவு என்ற இடத்தை நேற்று முன்தினம் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆயுதப் படையினர் சுற்றி வளைத்துச்சோதனையிட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை பத்து மணியளவில் லொறி ஒன்றில் சென்ற இவர்கள் அங்கு நின்ற சுமார் பத்து இளைஞர்களைக் கைது செய்து ஆனையிறவு முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

சோதனையிட வந்த ஆயுதப் படையினரைக் கண்டு ஓடிய இளைஞர்கள் மீது ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது இதனால் இரண்டு இளைஞர்கள் காயமடைந்தனர்.

அவர்களும் ஆயுதப் படையினரால் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களுள் ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

ஏனையோர் செய்தி அச்சுக்குப் போகும் வரை விடுதலை செய்யப்படவில்லை.

## புனர் . . .

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கங்களும் தாம் சேகரிப்பவற்றை தம் விருப்பப்படி அகதிகளுக்கும் அகதிமுகாம்களில்தங்கியிருப்பவர்களுக்கும் கொடுத்து உதவுமுன் மற்றைய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தாம் உதவ உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்த நிறுவனங்களாலும் உதவி வழங்கப்பட்டதா என்பதை தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே புனர் வாழ்வு அளிக்கும் நிறுவனங்கள் தமக்குள் ஒருங்கிணைந்து ஆலோசித்து ஒரு தலைமையில் இயங்குவதே சாலச் சிறந்தது. அப்படிச் சேவைசெய்யும்பொழுது உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சேவை செய்தவர்களாவீர்கள் மோசடி செய்பவர்களையும் இனம் கண்டு கொள்ள முடியும்.

இந்தநிலையை நீடிக்க விட்டால் இப்புனித பணியின் மகிமையை இழந்தவர்களாகவே கணிக்கப்படுவீர்கள்.

(கனகசபாபதி யாழ்நகர்)

## அடகு நகைகளை . . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யானர், முப்படைத் தலைமை அலுவலகம், அடகுவைத்தோர் சங்கத் தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இணைப்பதிகாரியைச் சந்தித்தபோது அடகு வைத்தோர் சங்கத்தினர் அடகு வைத்த நகைகளைத் திருப்பி எடுக்க இதுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றி எடுத்துக் கூறினர்.

"அடகு வைக்கப்பட்ட நகைகள் திருப்பிக் கொடுக்கப்படாதது நியாயமற்ற செயல். அடகு வைக்கப்பட்ட நகைகளை மீட்க முடியாத நிலையில் பெருந்தொகை மக்கள் உள்ளனர் என்பது இப்போதுதான் எனக்கு முதன்முறையாகத் தெரியவந்துள்ளது." — இப்படி இணைப்பதிகாரி தங்களிடம் சொன்னதாக அடகு வைத்தோர் சங்கம் அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

இணைப்பதிகாரியுடன் பேசிய பின்னர் தான், பாதுகாப்புக் காரணங்களினால் நகைகளை மீளளிப்புச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று வங்கி நிர்வாகம் கூறி வந்தது உண்மைக்குப் புறம்பானது என்பது தெரிய வந்தது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நகைகளை மீளளிப்புச் செய்வது சம்பந்தமாக வங்கி நிர்வாக முறையில் ஒரு முடிவு வரும் வரை மறியல் இயக்கம் தொடர்ந்து நடைபெறும் என்றும் அடகு வைத்தோர் சங்கம் அறிவித்துள்ளது.

## உதவி பொலீஸ் அதிபர் மர்ம மரணம்!
### படுக்கையில் சூட்டுக் காயங்களுடன் சடலம்

கொழும்பு, மார்ச் 24

தெல்தெனியா உதவிப் பொலீஸ் அதிபர் திரு. ஏ. கே. மைத்திரிபாலா துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் படுக்கை அறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கண்டியில் உள்ள அவரின் வீட்டு அறையில் இச் சம்பவம் இடம் பெற்றது.

சடலம் இருந்த அறையில் துப்பாக்கி ஒன்றும் காணப்பட்டது.

திருமணமாகாத இவரின் வயது 35. இன்று (திங்கள்) மரணவிசாரணை நடைபெறும்.

தாய்க்கும் காதலிக்கும் அவர் எழுதிய கடிதங்கள் படுக்கை அறையில் பொலீஸாரால் கண்டெடுக்கப்பட்டன.

## பண்டாரி . . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்களில் அடிபடுகின்றன.

ஒருவர் உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சராகப் பணியாற்றிய டாக்டர் காரன்லிங்.

வங்காளத்தின் பழம் பெரும் அரசியல் தலைவர் சித்தார்த்த சங்கர்ரே மற்றவர்.

## இஸ்ரவேல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்ற ரீதியில் இந்த ஆலோசகர்கள் பாகிஸ்தானில் தங்கியுள்ளனர்.

இஸ்ரவேலர்கள் பாகிஸ்தானுக்குள் அனுமதிக்கப்பட்டார்கள் என்ற அவப் பெயர் பாகிஸ்தானுக்கு ஏற்படாது இருக்கவே இந்த ஏற்பாடு.

இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் [illegible] கின்றன. — இவ்வாறு அந்தச் செய்தியில் [illegible] விக்கப்பட்டுள்ளது.

## தமிழ் இளைஞர் தாக்கப்பட்டார்

கல்முனை, மார்ச் 24

கல்முனை, பாண்டிருப்பில் 18 வயது இளைஞன் ஒருவன் ஆயுதப்படையினரால் நேற்றுப் பகல் கைது செய்யப்பட்டான்.

கைது செய்யப்பட்ட இளைஞன் மிருகத்தனமான முறையில் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

[illegible] என்பவரே கைது செய்யப்பட்ட [illegible] என்று கூறப்படுகிறது.

## இலங்கை . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லையே இலங்கை அரசு சொல்கிறது. இது பெரும் கவலையைத் தருகிறது.

இப்படி திரு. தினேஷ் சிங் சொன்னார்.

இன்னொரு இந்திரா காங்கிரஸ் உறுப்பினரான திரு. ஜி. ஜி. ஸ்வெல் பேசுகையில் சொன்னதாவது:

வளர்ந்து வரும் பாகிஸ்தான் - இலங்கை ராணுவ உறவால் இப் பகுதியில் பெரும் பதற்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் மறுக்கப்படுகின் [illegible] தமிழர் கொலை செய்யப்படுகின் [illegible] வேண்டும்.

## தாதிகள் சங்கத்திற்கு பிக்கு தலைவராகலாமா?
### ஜனாதிபதி எழுப்பும் பிரச்சினை

கொழும்பு, மார்ச் 24

மாதர் உறுப்பினர்களாக இருக்கும் தொழிற் சங்கத்தின் தலைவராக பிக்கு ஒருவர் இருக்கலாமா? இதை திரிபிடகம் அனுமதிக்கிறதா?

தாதிகள் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து இந்த வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

பெண்கள் அங்கம் வகிக்கும் ஸ்தாபனம் ஒன்றின் தலைவராக பிக்கு ஒருவர் பணிபுரிவதை திரிபீடகம் அனுமதிக்கவில்லை என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன சொன்னார்.

"அப்படிப் பணிபுரிவதை திரிபீடகம் அனுமதிக்கிறது. அதை நிரூபிக்க நான் தயார்" என்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு அரசினால் தடைசெய்யப்பட்டுள்ள ஐக்கிய தாதிகள் சங்கத் தலைவர் வண முருட்டுவத்த ஆனந்த தேரர் சொன்னார்.

இதனிடையில் நேற்று தொழிற்சங்கங்களின் கூட்டம் ஒன்று நாரஹேன்பிட்டியில் நடந்தது.

மஹரகம எம்.பி.தினேஷ் குணவர்த்தன உட்பட தொழிற்சங்கப் பிரமுகர்கள் பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்,

தாதிகளின் வேலை நிறுத்தப் போராட்டம் தொடரும் என்று ஆனந்த தேரர் அறிவித்தார்.

## மட்டக் . . . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறைவாகவே இருந்தது.

இதேவேளை மட்டக்களப்பு காத்தான்குடிப் பகுதிகளில் வீதித்தடை போட்டுப் பயணிகள் ஊர்காவல்படையினரால் சோதனை இடப்பட்டனர்.

இந்தச் சோதனையின் போது தமிழ்ப்பயணிகள் துன்புறுத்தப் பட்டதாக அரசாங்க அதிபருக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்தன என்று அறியவருகிறது.

இதற்கிடையில் ஏற்கனவே கடத்தப்பட்ட தமிழ்முதலாளி ஒருவருக்குச் சொந்தமான லொறி, முஸ்லிம் மதகுருமார், பிரமுகர்களின் முயற்சியினால் விடுவிக்கப்பட்டது.

கடத்தப்பட்ட முஸ்லிம்களைத் தேடுவதில் பிரஜைகள் குழுத் தொண்டர்கள் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக மட்டக்களப்புப் பிரஜைகள் குழுவின் செயலாளர் திரு. சாம் தம்பி முத்து, ஊர்காவல் படைப் பொறுப்பதிகாரி ஜனாப் ஏ. எஸ். பதுர்தீனிடம் எடுத்து விளக்கினார்.

ஆகையால் முஸ்லிம் நபர்களைத் திரும்ப ஒப்படைப்பதற்குக் காலக்கெடு விதிப்பதை நிறுத்துமாறும் கேட்டுக் கொண்டார். அதனைக் கவனிப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

கடத்தப்பட்ட இரண்டு முஸ்லிம் நபர்களை நேற்று (ஞாயிறு) பி. ப 4. 30 மணிக்கு முன்னர் விடுவிக்க வேண்டும் என இறுதி அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. காத்தான்குடியில் வைத்து இந்தக் காலக்கெடு அறிவித்தல்கள் ஒலிபரப்பப்பட்டன.

## கோயில் . . .

(1ம் பக்க தொடர்ச்சி)

கள் அடுக்கப்பட்டு இராணுவ வீரர்கள் இரவு பகலாக 'சென்றி' கடமை புரிகிறார்கள்.

அந்த ஆலயத்தின் புனித தீர்த்தக் கிணற்றில் படையினர் குளிக்கிறார்கள்.

இவ்வாறு ஆலயத்தின் "புனிதம் பாதுகாக்கப்படுவதற்கு" காரணம் ஆலயத்திற்கு அருகில் ஆயுதப் படை முகாம் ஒன்று இருப்பதே ஆகும்.

னர்.

இராணுவத் தீர்வு காணுவதே தனது நோக்கம் என்று திரு. ஜெயவர்த்தன கூறிவிட்டார்.

இலங்கை — பாகிஸ்தான் இராணுவ உறவு பற்றி இந்தியா தனது எண்ணத்தைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க

## தபால் நிலையம் கொள்ளை

மட்டக்களப்பு, மார்ச் 24

மட்டக்களப்புப் பிரதம தபால் நிலையத்தில் இரண்டாவது தடவையாக வெள்ளி பகல் இனந்தெரியாதவர்கள் புகுந்து கொள்ளை இட்டனர்.

சுமார் 6,000 ரூபா பெறுமதியான முத்திரைகள். பணம் முதலியன கொள்ளை இடப்பட்டன என்று தெரிகிறது.

வெள்ளி பகல் 11 மணியளவில் இந்தக் கொள்ளை நடைபெற்றது ஆயுதம் தாங்கி வந்த சிலரே இக் கொள்ளையை நடத்தினர்

## நல்லநாயகம் வழக்கில் நடேசன் ஆஜராகினர்

கொழும்பு, மார்ச் 24

கல்முனையைச் சேர்ந்த திரு. போல் நல்லநாயகத்துக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கில் திரு. நல்லநாயகத்தின் சார்பில் பிரபல சட்டத்தரணி எஸ். நடேசன் கியூ.சி.ஆஜராகியுள்ளார்.

பொய் வதந்திகள், அறிக்கைகளை வெளியிட்டு அரசுக்கு எதிரான உணர்வுகளைத் தட்டி எழுப்பச் சதி செய்ததாக திரு. போல் நல்லநாயகத்தின் மீது அரசு குற்றஞ்சாட்டி உள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. சே. விக்கினராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசாரணையின் போது உதவிப் பொலீஸ் அதிபர் திரு. மல்கம்டி குருஸ் சட்டத்தரணி எஸ் நடேசனால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

கடந்த ஆண்டு சித்திரை மாதத்தில் அக்கரைப்பற்றுப் பகுதியில் காரைதீவுக் கிராமத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

## மட்டக்களப்பில் அப்பாவி மக்கள் கைது;
### பிரஜைகள் குழு கண்டனம்

மட்டக்களப்பு, மார்ச்.24

தேடுதல் என்ற பெயரில் மட்டக்களப்பில் அப்பாவி மக்களைக் கைது செய்வதை கண்டித்து மட்டக்களப்பு பிரஜைகள் குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த சனியன்று நடந்த கூட்டத்தில் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் அப்பாவித் தமிழர் கண்டபடி கைதானது குறித்து ஆராயப்பட்டது.

கூட்டத்துக்குத்தலைமை வகித்துப் பேசுகையில் குழுத்தலைவர் திரு. கே. தங்கவடிவேல் சொன்னதாவது:-

கிழக்கில் தீவிரவாதத்தை ஒரு மாதத்தில் அடக்கிப் போடுவேன் என்று அமைச்சர் அத்துலத்முதலி கூறியிருக்கிறார். அப்பாவி மக்களைக் கைது செய்வதன் மூலம் தீவிரவாதத்தை அடக்கி விடலாம் என்று அமைச்சர் எண்ணுகிறாரா?

இப்படி திரு. தங்கவடிவேல் கேட்டார்.

பிரஜைகள் குழுவின் கண்டனத் தீர்மானம் ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பிவைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

## தீவிரவாதிகளை ஒடுக்க அதிக செலவு; அதனால்
### சம்பள உயர்வு வழங்க முடியாது
### ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 24

தீவிரவாதிகளை ஒடுக்க அரசு அதிகம் செலவழித்து வருகின்றது. இந்த நிலையில் சம்பள உயர்வு வழங்க முடியாது.

வேலை செய்யும் தாதிகள் அங்கம்வகிக்கும்அரச தாதிமார் சங்க உறுப்பினர்கள் மத்தியில் பேசும் போது ஜனாதிபதி ஜெயவர்த்தன மேற்கண்டவாறு சொன்னார்.

வேலைநிறுத்தம் செய்யும் தாதிமார்களுடன் பேசத் தயாராக உள்ளேன். சம்பள உயர்வு தவிர வேறு பிரச்சினைகளைப் பேசுவேன் - இப்படி ஜனாதிபதி மேலும் சொன்னார்.

## இன்று தேர்

சுன்னாகம், மார்ச். 24

சுன்னாகம் தாளையடி ஐயனார் ஆலயத்தேர் திருவிழா (இன்று) திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## கடும் தேடுதல் . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவற்றினால் அப்பகுதியைச் சூழ இருந்த கிராமங்களைவிட்டு மக்கள் அச்சத்தினால் தப்பி ஓடினார்கள்.

இதேவேளை நேற்று முன்தினம் இப்பகுதியில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஒருவர் மரணமானார்.

## சமரச மாநாடு

கல்முனை, மார்ச் 24

சமரச மாநாடு ஒன்றைக் கூட்ட மட்டக்களப்பு ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை நடவடிக்கை எடுத்து வருகிறார்.

தமிழ்,முஸ்லிம் நபர்கள் மாறி மாறிக் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக தமிழ், முஸ்லிம்கள் மத்தியில் நிலவும் பதற்ற நிலையைத் தணிக்கவே இச்சமரச மாநாடு கூட்டப்படவிருக்கின்றது.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான திரு. கா. வேல்முருகுவின் வேண்டுகோளைத் தொடர்ந்து ஆயர் சமரச மாநாட்டைக் கூட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org